# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>இல் போயா தினத்தை குறிக்கும் முகமாக இந்தியாவின் உயர்ந்த பௌத்த மரபினைக் காண்பிக்கும் கண்காட்சி கம்பஹாவில் நடைபெற்றது</u>**

கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் நடமாடும் பௌத்த கண்காட்சியின் 10வது பதிப்பு இல் போயா தினமான 2024 நவம்பர் 15ஆம் திகதி கம்பஹா, வத்தளை, ஹெந்தளையில் உள்ள ஹெந்தளை புராண ரஜ மஹா விகாரையில் நடைபெற்றது.

2. இந்தியாவின் உயர்ந்த பௌத்த மரபினைக் காண்பிக்கும் இந்த கண்காட்சியில் புத்தபெருமானின் வாழ்வின் முக்கிய தருணங்கள் மற்றும் இந்தியாவின் மஹாராஷ்டிரா, உத்தர பிரதேஷ், பீஹார், லடக், ஆந்திர பிரதேஷ் மற்றும் காஷ்மீர் உள்ளிட்ட பகுதிகளில் பரந்து காணப்படும் பிரபலமான பௌத்த யாத்திரைத் தலங்கள் ஆகியவற்றை பிரதிபலிக்கும் வகையிலான புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

3. இவ்வருடம் ஒவ்வொரு போயா தினத்திலும் நாடளாவிய ரீதியில் உள்ள விகாரைகளில் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் நடமாடும் இக்கண்காட்சித் தொடர் ஒழுங்கமைக்கப்பட்டுவருகின்றது. நவம் போயா தினத்தில் களுத்துறை போதி வளாகத்தில் நடத்தப்பட்ட முதலாவது கண்காட்சியுடன் ஆரம்பமான இத்தொடர் கொழும்பில் உள்ள ஸ்ரீ சம்போதி மகா விகாரை, இரத்மலானை பரம தம்ம சைத்திய பிரிவேனா, மாத்தளை தர்மராஜ பிரிவேனா, மற்றும் ஏனைய பல தலங்களிலும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் வத்தளையில் நடைபெற்ற 10ஆவது பதிப்புடன் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான மக்கள் - மக்கள் உறவுகளை மேலும் வலுவாக்கும் தனது பயணத்தினை இக்கண்காட்சி மேலும் தொடர்கின்றது.

4. ஒவ்வொரு பதிப்பும் அமோக வரவேற்பைப் பெற்றதுடன் இவற்றில் கலந்துகொள்ளும் பக்தர்கள் இந்த கண்காட்சியின் ஆன்மீக மற்றும் கலாசார முக்கியத்துவம் குறித்து தமது பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர். இந்த முன்னெடுப்பானது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொதுவான மரபினையும் ஆழமான கலாசார இணைப்பினையும் சுட்டிக்காட்டும் அதேவேளை இரு நாட்டு மக்களிடையிலான உறவினை வலுவாக்கும் கூட்டு முயற்சிகளுக்கும் வலுச்சேர்க்கின்றமை குறிப்பிடத்தக்கது.

******************

**கொழும்பு**
**15 நவம்பர் 2024**